# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2024
# தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்
# செலவுத் தலைப்பு இலக்கம் 311

5 ஆம் மாடி, 1 ஆம் கட்டம், செத்சிறிபாய,
பத்தரமுல்ல
தொலைபேசி இல. 0112872054ø 0112887164
பெக்ஸ் இல. 0112872061ø 0112872048
மின்னஞ்சல் - **info@nppd.gov.lk**

நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

# உள்ளடக்கம்

01 அத்தியாயம் - நிறுவனத்தின் தோற்றப்பாடு /அமுல்படுத்துவதன் பொழிப்பு ....................... 2

02. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு.................................................... 7

03 அத்தியாயம் - 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை ................................................................................. 16

04 அத்தியாயம் - செயலாற்றுகைக் சுட்டி ................................................................................. 30

05 அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை ........................................................................................................... 30

06. அத்தியாயம் - மனிதவளத் தோற்றப்பாடு ........................................................................ 31

07. அத்தியாயம் - இயைபு அறிக்கை ........................................................................................ 33

01 அத்தியாயம் - நிறுவனத்தின் தோற்றப்பாடு /அமுல்படுத்துவதன் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1947 ஆம் ஆண்டு நாடு, நகரத் திட்டமிடல் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இதனை அடுத்து துறைசார் அபிவிருத்தியும், பிரதேச அபிவிருத்தியும் கைகோர்த்துக் கொண்ட நிலைபேறான அபிவிருத்திச் செயன்முறையின் அவசியத்தன்மை எழுந்ததன் காரணமாக, அதற்குத் தீர்வாக தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாக தேசிய பௌதீக திட்டமொன்றை தயார் செய்வதை நோக்காகக் கொண்டு 2000 இன் 49 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் திருத்தச் சட்டத்தின் மூலம் 2000 ஆம் ஆண்டில் இத்திணைக்களம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களமாக மீளமைக்கப்பட்டது.

அதற்கமைய, தேசிய திட்டமிடல் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட தேசிய பௌதீக திட்டத்தை தயார் செய்த பின்னர் அதற்கு இசைவாக இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் தனித்தனியாக அவ்வவ் மாகாணங்களின் சிக்கல்களை இனங்கண்டு, காணப்படுகின்ற வளங்களை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு நிலைபேறான அபிவிருத்திக்கு வழிகாட்டலொன்றைப் பெற்றுக் கொடுக்க பிராந்திய பௌதீக திட்டங்களை தயார் செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையின் இருபத்து ஐந்து நிருவாக மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ள இயற்கை வளங்களை விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்திக் கொண்டும், இயற்கைச் சூழலை பாதுகாத்துக் கொண்டும், இயற்கை அனர்த்தங்களை குறைத்துக் கொள்ளும் வகையில் தகுந்த இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட நகர மற்றும் சேவை நிலையங்களைத் தாபிப்பதற்கு நகரங்களை திட்டமிடல், இலங்கைக்கு உகந்த புதிய நகரத் திட்டமிடலாளர்களை இனங்காணல், பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புக்களை உபாயமுறையில் பயன்படுத்திக் கொண்டு இலங்கைக்கு பொருத்தமான கைத்தொழில் பூங்கா மாதிரியமைப்பை இனங்காண்பதன் மூலம் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வது மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக, இலங்கையின் பிரதான புனித பூமிகளின் முறையான அபிவிருத்திக்கான கட்டமைப்புசார் திட்டங்களை தயார் செய்வதும், இதற்கு இசைவாக கருத்திட்டங்களைத் தயார் செய்தல், மேற்படி கருத்திட்டங்களுக்கான கட்டிடக்கலைசார் மற்றும் பொறியியல்சார் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயார் செய்வதையும் மேற்கொண்டு இலங்கையின் சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றி இலங்கையில் திட்டமிடலில் ஈடுபட்டுள்ள பிரதான அரச நிறுவனம் என்ற வகையில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் இலங்கையின் அபிவிருத்திக்கு நிறைவேற்றியுள்ள மற்றும் நிறைவேற்றி வருகின்ற செயற்பணி அளப்பரியது.

இப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தேசிய பௌதீக திட்டடமிடல் திணைக்களத்தின் பிரதான பிரிவுகளான பிராந்திய திட்டமிடல் பிரிவு, பிரதேச பௌதீக திட்டமிடல் பிரிவு, ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மேற்படி பணிக்குப் பங்களிப்பு செய்யும் நிருவாகப் பிரிவு, கணக்குகள் பிரிவு, பொறியியல் பிரிவு, கட்டிடக் கலைப் பிரிவு ஆகிய பிரிவுகள் கூட்டாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றன.

## 1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

### நோக்கு

நல்ல முறையில் திட்டமிடப்பட்ட நிலைபேறான மனங்கவர் நிலத்தின் முன்னோடி”

### செயற்பணி

1. தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கையை தயார் செய்தல்.
2. இலங்கையிலுள்ள காணிகளில் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல்சார் துறைகளின் இணைந்த திட்டமிடலை மேம்படுத்தல் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய பௌதீக திட்டமொன்றை தயார் செய்தல்.
3. பிராந்திய மற்றும் பிரதேச திட்டங்களின் மூலம் மேற்படி தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகள் மற்றும் தேசிய பௌதீக திட்டங்களை அமுல்படுத்துதல்.
4. பிராந்திய அல்லது பிரதேச பௌதீக திட்டங்களை அதிகாரிகள் பின்பற்றும் பொருட்டு பௌதீக திட்டமிடல் முன்னோடி அறிவுரைகளைத் தயார் செய்தல்.
5. இயற்கை வசதிகளைப் பாதுகாத்தல், இயற்கைச் சூழல், கட்டிடக்கலைசார் மற்றும் வரலாற்று முக்கியத்துவம்மிக்க கட்டிடங்கள் மற்றும் இயற்கையாகவே அழகிய இடங்களை பேணுவதற்கன ஏற்பாடுகளை செய்தல்.

### நோக்கங்கள்

1. இலங்கையின் திட்டமிடப்பட்ட நிலைபேறான மற்றும் மனங்கவர் பௌதீக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகள் மற்றும் திட்டங்களை தயார் செய்தல்.
2. இலங்கையில் மற்றும் கடல் எல்லைக்கு உரித்தான பிரதேசங்களில் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல்சார் துறைகளில் இணைந்த திட்டமிடலில் ஈடுபடுதல்.
3. பௌதீக அபிவிருத்திகளை திட்டமிடுவதற்கு எந்தவொரு நிறுவனம் அல்லது அமைப்புக்கும் தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல்.
4. நம்பகமான மற்றும் விளைதிறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு திணைக்களத்தின் கொள்ளளவை அபிவிருத்தி செய்தல்.

## 1.3 பிரதான பணிகள்

i. தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கையை தயார் செய்தல்.
ii. தேசிய பௌதீக திட்டத்தை தயார் செய்தல்.
iii. பிராந்திய அல்லது பிரதேச பௌதீக திட்டமிடல் அதிகாரிகளினால் பின்பற்றுவதற்கென பௌதீக திட்டமிடல் முன்னோடி அறிவுரைகளை தயார் செய்தல்.
iv. பிராந்திய அல்லது பிரதேச பௌதீக திட்டமிடல் அதிகாரி யாதாயினுமொரு பிராந்திய அல்லது பிரதேச திட்டத்தை தயார் செய்ய முடியாது போன சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறான திட்டமொன்றை தயார் செய்யுமாறு குறித்த அதிகாரி கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவ்வாறான ஏதேனும் பிராந்திய அல்லது பிரதேச திட்டத்தை தயார் செய்தல்.

v. பிராந்திய பௌதீக திட்டத்தை தயார் செய்யும் போது மற்றும் அபிவிருத்தி செய்யும் போது மாகாண சபைகளுக்கு உதவுதல்.
vi. தேசிய பௌதீக திட்டமிடல் சபையிடம் சமர்ப்பிப்பதற்காக தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைக்கு இசைவாக அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சிபாரிசுகளை சமர்ப்பித்தல்.
vii. தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை, தேசிய பௌதீக திட்டம் மற்றும் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற தேசிய பௌதீக திட்டமிடல் உபாயமுறைகளை அடிக்கடி மீளாய்வு செய்தல் மற்றும் பரிசோதித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பத்தில், மேற்படி கொள்கை, திட்டமிடல் உபாயமுறைகளில் செய்ய வேண்டிய மாற்றங்களை ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சிபாரிசு செய்தல்.
viii. தேசிய பௌதீக திட்டமிடல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய பௌதீக திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதை ஒழுங்குறுத்தல்.
ix. தேசிய பௌதீக திட்டமிடல் சபை மற்றும் அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுவினால் நிறைவேற்றுமாறு கோரப்படக்கூடிய செயலகமொன்றின் பணியை நிறைவேற்றுவதும் உள்ளடங்களாக, சபையின் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் சகல செயற்பாடுகளின் பொதும் சபைக்கும், ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் உதவுதல்.

## 1.3 நிறுவன ஒழுங்கமைப்பு



**1.4** தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியது.

1. பிராந்திய பௌதீக திட்டமிடல் பிரிவு
2. பிரதேச பௌதீக திட்டமிடல் பிரிவு
3. ஆராய்ச்சிப் பிரிவு
4. ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் பிரிவு
5. கட்டிடக்கலைப் பிரிவு
6. பொறியியல் பிரிவு
7. நிருவாகப் பிரிவு
8. கணக்குகள் பிரிவு
9. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

1.5 2024 ஆம் ஆண்டு தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு நிதி அமைச்சிடமிருந்து நிதி ஏற்பாடுகள் கிடைத்தன.

# 02 அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

**விசேட வெற்றிகள் - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் 2024 ஆம் ஆண்டு பின்வரும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.**

1. தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் 2000 இன் 49 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் (திருத்த)ச் சட்டத்திற்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ள தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2019 – 2050 வரையானது, 2019 யூன் மாதம் 23 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து இத்திட்டத்தை இற்றைப்படுத்தி தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2048 எனத் தயார் செய்யப்பட்டு அப்போதைய சனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற தேசிய பௌதீக திட்டமிடல் பேரவையில் 2023 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

- தேசிய பௌதீக திட்டமிடல் பேரவையினால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகளுக்கு அமைய பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.







- தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2021-2048 அப்போதைய கௌரவ நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே திட்டமானது சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடமும் சமர்ப்பிக்கப்பட்டு பிரதேச

அலுவலர்கள் மற்றும் அரசியல் தலைமைத்துவத்தையும் விழிப்புணர்வூட்டுமாறு அறிவுரை வழங்கப்பட்டது.

- அதற்கமைய, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சகல மாவட்டங்களினதும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2. 2000 இன் 49 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 5(ஏ), (டீ) மற்றும் 5(சீ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு உரித்தான விடயப்பொறுப்பு அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற பிரதேசங்களுக்கு வலயமயப்படுத்தல் திட்டங்களை தயார் செய்தல் வேண்டும். அதற்கமைய 2024 ஆம் ஆண்டு கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களுக்கான வலயமயமயமாக்கல் திட்டங்களை தயார் செய்யப்பட்டன. இதன் போது ஒவ்வொரு வலயமயமாக்கல் திட்டங்களுக்கும் 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறாகும்.

மத்திய மாகாணம்

மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் -2035, 11 ஆம் பகுதி ፡Central Province Regional Physical Plan –2035,Volume II) தயார் செய்வது தொடர்பாக,

-துறைசார் அபிவிருத்தி உபாயமுறைகளை (Sectoral Development Strategies) தயார் செய்தல்

-அமுல்படுத்தும் கருத்திடடங்களை (Action Projects) இனங்காணல்

-மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 11 ஆம் பகுதி ፡Central Province Regional Physical Plan –2035,Volume II) அறிக்கையை தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை.

கிழக்கு மாகாணம்

- கிழக்கு மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 11 ஆம் பகுதி (Eastern Province Regional Physical Plan –2035,Volume II) அறிக்கையை தயார் செய்தல்

3. பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள நகரப் பிரதேசங்களை இனங்காணல் மற்றும் பிரகடனம் செய்தல்

உலகின் பல்வேறு நாடுகளும் பல்வேறு தகவுதிறன்கள் / சுட்டிகளைப் பயன்படுத்தி நகர்ப் பிரதேசங்கள் மற்றும் கிராமப் பிரதேசங்களை வகைப்படுத்துகின்றன. இன்று இலங்கையில் நகர்ப்புற பிரதேசங்களாக வகைப்படுத்தும் போது தகவுதிறன்கள் / சுட்டிகளாக நிருவாக ரீதியான அலகுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், உத்தியோகபூர்வமாக மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளின் பிரதேசங்கள் மாத்திரம் நகர்ப்புறப் பிரதேசங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இலங்கையின் நகரமயமாக்ககலின் உண்மையான நிலைமையை வெளிப்படுத்தத் தவறியுள்ளது. இந்தத் தேவைப்பாடு பற்றி 1998 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி பற்றிய சனாதிபதி செயலணி மூலமும் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், முறையாக அதற்கான கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பல்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் இது பற்றிய பல்வேறு கற்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் நகர மற்றும் கிராமிய பிரதேசங்களை வகைப்படுத்த வேண்டிய தீவிர அவசியத்தன்மை தற்போது காணப்படுவதுடன், மேற்படி வகைப்படுத்தலை மேற்கொள்வதன் மூலம் நகர அபிவிருத்தியை முறைப்படுத்த முடியும் என்பதுடன், இதன் திசைமுகப்படுத்தலை திட்டமிடுவதற்கும், எதிர்வுகூறுவதற்கும் இயலுமாகும். மேற்படி விடயத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள நகர்ப்புற பிரதேசங்களை இனங்காணல் மற்றும் பிரகடனம் செய்தல் எனும் தலைப்பைக் கொண்டதாக அவி/21/2082/306/092 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய எமது திணைக்களத்தினால் பல்வேறு நிறுவனங்கள் ஊடாக அண்மையில் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சிகளையும் ஆராய்ந்துபார்த்து நகர்ப்புறப் பிரதேசங்கள் மற்றும் கிராமிய பிரதேசங்களை வகைப்படுத்துவதற்கு உகந்த தகவுதிறன்கள் இனங்காணப்படுவதுடன், மேற்படி தகவுதிறன்களுக்கு அங்கீகாரம் வழங்குவது ஆலோசனை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அப்போதைய நகர அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களிடம் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் வரைபடங்கள் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தக் கற்கையின் பெறுபேறுகளை சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடமும் சமர்ப்பித்து கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை பெற்றுக் கொள்ளுமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில் சகல மாவட்டங்களினதும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிடம் சமர்ப்பித்து எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

4. அநுராதபுரம் எத்துல்நுவர தொல்பொருளியல் பேணல் பிரதேசத்தில் வசிப்பவர்களை அப்பிரதேசத்திலிருந்து படிப்படியாக மீளக் குடியமர்த்தி எத்துல்நுவரவை தொல்பொருளியல் பேணல் பிரதேசமாக பிரகடனம் செய்வதன் மூலம் எத்துல்நுவர பிரதேசத்தில் தொல்பொருளியல் அகல்வுகளை மேற்கொள்ளல் மற்றும் பேணுவதற்கு வசதிகளை செய்துகொடுப்பதை நோக்காகக் கொண்டு அநுராதபுரம் லோலுகஸ்வெவ புதிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

மேலும் இதன் மூலம் அநுராதபுரத்தில் சுற்றுலா மனங்கவர் தன்மையை மேம்படுத்தல் மற்றும் பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்துவது எதிர்பார்க்கப்படுவதுடன் மென்மேலும் சிறந்த வாழ்க்கைத் தரம் மற்றும் நகர வசதிகளை உறுதி செய்வதன் மூலம் **தொண்டர் அடிப்படையில் மீளக் குடியமர்த்தும் தேசிய கொள்கைக்கு (NIRP)** இணங்க எத்துல்நுவர வசிப்பாளர்களை மீளக்குடியமர்த்துவது நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

எத்துல்நுவர காணி கொள்ளல் செய்யும் பிரேரணை தொல்பொருளியல் திணைக்களத்தினால் காணிகள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட முன்னர் எத்துல்நுவரவுக்கு **தொண்டர் அடிப்படையில் மீளக் குடியமர்த்தும் தேசிய கொள்கைக்கு (NIRP)** இணங்க மீள் குடியேற்றச் செயற்றிட்டத்தை தயார் செய்யுமாறு காணிகள் அமைச்சினால் ஆலோசனை வழங்கப்பட்டதுடன், பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற " **பாரியளவிலான கருத்திட்ட உபாயமுறைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல்"** குழுவினாலும் மீள் குடியேற்றத்துக்கான செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.
தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு உரித்தான மீள் குடியேற்றச் செயற்றிட்டத்தை தயார் செய்வதற்கு நிபுணத்துவ அறிவைக் கொண்ட அலுவலர்கள் இல்லை என்பதனால் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் அறிவுரைக்கு அமைய அதற்கென தனிநபர் ஆலோசகர்களை நியமனம் செய்யத் தேவையான பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் அறிவுரைக்கு அமைய நிதி அமைச்சின் விசேட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
அதற்கமைய, அரச நிதிகள் திணைக்களத்தினால் தனிப்பட்ட ஆலோசகர்கள் 09 பேரை ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்கு 2023.08.07 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டது.
செலவினத்தை குறைப்பதற்காக தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தமக்குரித்தான தொழில்வல்லுனர்களைப் பயன்படுத்தி மீள் குடியேற்றும் செயற்றிட்டத்தை தயார் செய்வதற்கு அத்தியாவசியமான பின்வரும் தனிநபர் ஆலோசகர்களை வழிகாட்டலின் பிரிவு 4 இற்கு அமைய நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- சமுதாய அபிவிருத்தி நிபுணர் (1)
- மீள்குடியேற்ற நிபுணர் (1)
- வாழ்வாதார அபிவிருத்தி நிபுணர் (1)
- தரவுப் பகுப்பாய்வு நிபுணர் (1)
- பூகோள தகவல் முறைமை நிபுணர் (1)
- சமூக அலுவலர்கள் (4)

அதற்கமைய, தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, உபாயமுறையிலான நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் வெற்றிகரமாக மீள் குடியேற்ற செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டு நிபுணர்களின் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. மேற்படி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிபுணர்களைக் கொண்டதாக தனிநபர் ஆலோசகர்களாக மீள்குடியேற்றத் திட்டத்தை தயார் செய்வதற்கு 2023.08.11 ஆம் திகதி தனிநபர் ஆலோசகர்களுக்கான பிரேரணைகள் (RFP) கோரப்பட்டதுடன், அதற்கு போதியளவு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக 2023.09.21 ஆம் திகதி தனிநபர் ஆலோசகர்களுக்கு மீண்டும் பிரேரணைகள் (RFP) கோரப்பட்டன.
அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் ஆலோசகர்களின் தொழில்நுட்பப் பிரேரணைகளை (Technical Proposal) மதிப்பீடு செய்த பின்னர் தெரிவு செய்யப்பட்ட ஆலோசகர்களின் நிதிசார் பிரேரணைகள் (Financial Proposal) தொடர்பான நேர்முகப் பரீட்சை 2023.11.27 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், திணைக்கள பெறுகை குழுவினால் தகைமை பெற்ற தனிநபர் ஆலோசகர்களின் பெயர்ப் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு நியமனம் செய்துகொள்ளப்பட்ட தனிநபர் ஆலொசகர்களில் பெரும்பாலானனோர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கடமையாற்றிய அலுவலர்களாவார்கள். மேற்படி அலுவலர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் மீள்குடியேற்றச் செயற்றிட்டத்தை தயார் செய்வதற்காக முன்வந்தார்கள். அவ்வாறாயினும் குறித்த அலுவலர்களுக்கு தனிநபர் ஆலொசகர்களாக நடவடிக்கை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்க முடியாது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் MUDH/ESDD/Gen ஆம் இலக்க 2024.07.02 ஆம் திகதிய கடிதம் மூலம் அறியத்தரப்பட்டது. அவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் வழங்கப்படாமை காரணமாக இப்பணி வெற்றியளிக்கவில்லை. இது தொடர்பாக நிதி அமைச்சினை விழிப்புணர்வூட்டி மீள்குடியேற்றத் திட்டத்தை தயார் செய்வதற்கு தகுந்த மதியுரை நிறுவனமொன்றை சேவைக்கு இணைத்துக் கொள்ள அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கமைய 2024.11.25 ஆம் திகதி பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன், 14 மதியுரை நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன. இவற்றிலிருந்து தகுதிவாய்ந்த 07 மதியுரை நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், பெறுகை செயன்முறைக்கு அமைய அவர்களிடமிருந்து பிரேரணைகள் கோரப்படவுள்ளன. .

5. 1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகர திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)b மற்றும் 21(2) ஆம் பிரிவின் கீழ் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்குக் கிடைத்தள்ள தத்துவங்களுக்கு இசைவாக புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தயார் செய்யப்பட்டுள்ள தகவுதிறன்களை பூர்த்தி செய்கின்ற சமய வழிபாட்டுத்தளங்கள் மாத்திரம் புனித பூமிகளாக வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்யப்படும். அதற்கமைய 2024 ஆம் ஆண்டில் வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்யப்பட்ட சமய ரீதியான இடங்கள் பின்வருமாறாகும்.

6.தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் பின்வரும் கருத்திட்டங்களுக்கு 2024 ஆம் ஆண்டில் கட்டிடக்கலை வரைபடம், கட்டமைப்புசார் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்துகொடுக்கப்பட்டன.

**2024 ஆம் ஆண்டு நகர அபிவிருத்திப் பிரதேசங்களாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ள இடங்கள்**

| மாகாணம் | மாவட்டம் | | புனித பூமி | மானியில் வெளியிடப்பட்ட திகதி | இலக்கம் |
|---|---|---|---|---|---|
| தெற்கு | ஹம்பாந்தோட்டை | 01 | உத்தகந்த ரஜமகா விஹாரை | 2024.02.07 | 2370/11 |
| வடமேல் | குருநாகல் | 02 | தம்தெனிய ரஜமகா விஹாரை | 2024.02.07 | 2370/12 |
| ஊவ | மொனராகலை | 03 | கொட்டகர பியங்கல ரஜமகா விஹாரை | 2024.02.20 | 2372/09 |
| வடமேல் | புத்தளம் | 04 | வெஹெரகல ரஜமகா விஹாரை | 2024.04.18 | 2380/27 |
| மத்திய | நுவரெலியா | 05 | பம்பரகெலே ரஜமகா விஹாரை | 2024.04.18 | 2380/27 |
| மேல் | கொழும்பு | 06 | பட்டபொத்த ஸ்ரீ சுதர்சனாராம புராண விஹாரை | 2024.05.07 | 2383/20 |
| தெற்கு | ஹம்பாந்தோட்டை | 07 | வாந்துரப்ப தேரபுத்தாபய ரஜமகா விஹாரை | 2024.05.07 | 2383/20 |
| சபறகமுவா | கேகாலை | 08 | கடிகமுவா ஸ்ரீ நாகவனாராமய | 2024.05.07 | 2383/20 |
| மத்திய | மாத்தளை | 09 | ஷேத்ராராம ரஜமகா விஹாரை | 2024.05.10 | 2383/44 |
| தெற்கு | ஹம்பாந்தோட்டை | 10 | ஹேனேகடுவ ரஜமகா விஹாரை | 2024.05.21 | 2385/12 |
| வடமேல் | குருநாகல் | 11 | கொன்னவ விஷனு தேவாலயம் | 2024.05.21 | 2385/12 |

### 2.5.2 எதிர்கால இலக்கு

**2025 ஆம் ஆண்டில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

1. இந்த அறிக்கையில் விசேட வெற்றிகளின் கீழ் இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பௌதீக திட்டமான 2050 இற்கு,
1. அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
2. இதனை அடுத்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
3. வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்தல்
4. சம்பந்தப்பட்ட தரப்பினர்களை விழிப்புணர்வூட்டல்

ஆகிய பணிகளை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. துரிதமாக முறையற்ற வகையில் அபிவிருத்தியடைந்து வருகின்ற குடியிருப்புக்களை கவனத்தில் கொண்டு முறையான அபிவிருத்திக்குரிய வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்கள் இரண்டுக்கும் பிராந்திய திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருவதுடன், 2025 ஆம் ஆண்டில்

- மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டத்தை தயார் செய்வது தொடர்பாக பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் துறைசார் வரைபடங்களைத் தயார் செய்தல்
- சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 2035, இடஞ்சார் கட்டமைப்புத் திட்டத்தை (Spacial Structural Plan – 2035) தயார் செய்தல்.
- துறைசார் அபிவிருத்தி உபாயமுறைகளை (Sectoral Development Strategies) தயார் செய்தல்
- மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் - 2035 (பருமட்டான திட்டம்) தயார் செய்தல் மற்றும் மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டக் குழு, தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பித்தல்.
- சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழு மற்றும் தேசிய பௌதீக வடிவமைப்புப் பேரவை ஆகிய குழுக்களிடம் சமர்ப்பித்து உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- மத்திய மாகாண பிராந்திய பௌதீக திட்டம் 2035, பகுதிய 11 ஐ வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனம் செய்தல்.

- கிழக்கு மாகாண பிராந்திய பௌதீக திட்டம் 2035, பகுதிய 11 ஐ (Eastern Province Regional Physical Plan –2035,Volume II) தயார் செய்வது தொடர்பில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழு மற்றும் தேசிய பௌதீக திட்டமிடல் பேரவை ஆகிய குழுக்களிடம் சமர்ப்பித்து தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- கிழக்கு மாகாண பிராந்திய பௌதீக திட்டம் 2035, பகுதிய 11 ஐ வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனம் செய்தல்.

3. தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2021-2048 இல் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய சுற்றாடல் அதிஉணர்வு வலயத்திற்கான திட்டங்களை தயார் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
4. அநுராதபுரம், எத்துல்நுவர தொல்பொருளியல் பேணல் பிரதேசத்திற்குள் வசிப்பவர்களை முறையாக மீளக் குடியமர்த்துவதற்கு லோலுகஸ்வெவ நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதுடன். 2025 ஆம் ஆண்டில்

| | |
|---|---|
| குருநாகல் | ரிதீகம ரம்படஎல்ல மொனராகல ரஜமகா விஹாரை |
| | வதுகன ஸ்ரீ சைலகிறி ரஜமகா விஹாரை |
| | ஸ்ரீ போதிவங்சாராம விஹாரை |
| | கனேகொட மண்டலாராம புராண விஹாரை |
| | ஸ்ரீ போதிருக்காராம விஹாரை |
| | யக்கிறிலென் ரஜமகா விஹாரை |
| | நாகொல்ல ரஜமகா விஹாரை |
| | ரெஸ்வெஹெர புராண விஹாரை |
| | கொன்கொட ஸ்ரீ போதிராஜாராம புராண விஹாரை |
| புத்தளம் | அத்துபந்தி கந்துருகோட்டே புராண ரஜமகா விஹாரை |
| | புராண லிஹினிகிறி ரஜமகா விஹாரை |
| | ஸ்ரீ சந்தனம் பொக்குன |
| | முல்கிறிகல ரஜமகா விஹாரை |
| | முரக்குட்டுவன கல்லென் ரஜமகா விஹாரை |
| | நந்திமித்ர நவவங்கு விஹாரை |
| | பெத்திகம ரஜமகா விஹாரை மஹகும்புக்கன்வல |
| | சிறி தெவ்ரம் வெஹெர ரஜமகா விஹாரை |
| காலி | கப்பின்ன மகா விஹாரை |
| | மாகால்ல கச்சிவத்த புராண ரஜமகா விஹாரை |
| | வெலிபிட்டிமோதர ஸ்ரீ துபாராம ரஜமகா விஹாரை |
| | குலிகொட புராண வனவாசல ரஜமகா விஹாரை |
| | ஸ்ரீ சுமனாராம புராண விஹாரை |
| | தொடன்கொட வரலாற்றுமுக்கியத்துவம்மிக்க குமாரமகா விஹாரை |
| | ஸ்ரீ ஜயவர்தனாராம விஹாரை |
| மாத்தறை | ஸ்ரீ ரோஹன உபோஸ்தாகார மகா விஹாரை |
| | பனன்வல கனேகொட புராண விஹாரை |
| | தீகவாளுகாராம ரஜமகா விஹாரை |
| | வெவுருகன்னல ரஜமகா விஹாரை |
| | மஹாமன்தின்த ரஜமகா விஹாரை |
| | வெலுவனாராம மூலமகா விஹாரை |
| | கோட்டேகொட சுதர்சன பிம்ப மகா விஹாரை |
| | எத்கந்த புராண ரஜமகா விஹாரை |
| | வெஹெரகம்பிட்ட ரஜமகா விஹாரை |
| | ஸ்ரீ சுமனாராம புராண விஹாரை |
| | சபரலே ஸ்ரீ நிவாசாராம புராண விஹாரை |
| | கனேகொட புராண ரஜமகா விஹாரை |
| ஹம்பாந்தோட்டை | ரம்பா ரஜமகா விஹாரை |
| | புத்தியாகம சீகல ரஜமகா விஹாரை |
| | கல்கொடகந்த மினி கிருல ரஜமகா விஹாரை |
| | கொந்தகல ரஜமகா விஹாரை |
| கொழும்பு | ரத்மலான புஷ்பாராமய |
| | சங்கபிட்டி புராண விஹாரை |
| | கொரதொட்ட ரஜமகா விஹாரை |
| களுத்துறை | பாஹியன்கல ரஜமகா விஹாரை |
| | மதுராவல பல்லபிட்டிய வித்யாசேகர பிரிவென |
| | வரகாகொட கல்லென் ரஜமகா விஹாரை |
| | பெலந்த கல்கனு கொடெல்ல புராண ரஜமகா விஹாரை |
| | வீதிகொட மகா விஹாரை |

| | |
|---|---|
| கம்பஹா | தடகமுவ சுமித்த ஸ்ரீ சுந்தராராமய விஹாரை |
| | அஸ்றிறிய புராண ரஜமகா விஹாரை |
| | ஹெய்யன்துடுவ புராண விஹாரை |
| | ஸ்ரீ ஜெயசுந்தராராம ரஜமகா விஹாரை |
| | சமன பெத்த ரஜமகா விஹாரை |
| | கொஸ்கம லெனவர ரஜமகா விஹாரை |
| அம்பாறை | வரலாற்றுமுக்கியத்துவம்மிக்க தீகவாப்பி பரிவார சைத்திய ரஜமகா விஹாரை |
| | முவன்கல ரஜமகா விஹாரை |
| | பரண சேதியாராம புராண விஹாரை |
| திருகோணமலை | பத்மராஜ பப்பத்த வன செனசுன |
| | சிறி கஜபா கல்லென் விஹாரை |
| | வில்கம்வெஹெர ரஜமகா விஹாரை |
| மன்னார் | மாதொட்ட ரஜமகா விஹாரை |
| பொலன்னறுவை | புதுருவயாய ரஜமகா விஹாரை |
| | வரலாற்றுமுக்கியத்துவம்மிக்க புராண ஹபரண ரெம்பிட்ட விஹாரை |
| | சோமாவதிய ரஜமகா விஹாரை |
| | கந்தேகம தனஞ்ஜய ரஜமகா விஹாரை |
| | திம்புலாகல ருகுனுகம வெஹெரகல போவனய |
| අනුරාධපුර | கொஸ்ஸோகந்த கசாகல புராண ரஜமகா விஹாரை |
| | கந்தேகம நாமலுவ சிங்ஹகிரி ரஜமகா விஹாரை |
| | மககந்தராவ தபோவனம் (கல்பன்சல) |
| | மகுலேவ ஸ்ரீ சுதர்சனாராம புராண விஹாரை |
| | ருனெகந்த ரஜமகா விஹாரை |
| | அவுக்கன ரஜமகா விஹாரை |
| | ஸ்ரீ தாதுசேன ரஜமகா விஹாரை |
| | கினிஹிரிகந்த ரஜமகா விஹாரை |
| முல்லைத்தீவு | ஸ்ரீ உதும்பரா ரஜமகா விஹாரை |
| நுவரெலியா | யதுருகெகு லியத்த ரஜமகா விஹாரை |
| | மலியதேவ புராண ரஜமகா விஹாரை |
| | மாதன்வல ரஜமகா விஹாரை |
| | ஹங்குரன்கெத்த வேகம ரஜமகா விஹாரை |
| மாத்தளை | ஸ்ரீ ரஜமகா கொஹொன் விஹாரை |
| | வரலாற்று முக்கியத்துவம்மிக்க சொனுத்தர ரஜமகா விஹாரை |
| கண்டி | வரலாற்று முக்கியத்துவம்மிக்க சகம ரஜமகா விஹாரை |
| இரத்தினபுரி | கொடகவெல ஸ்ரீ மகிந்த மகா விஹாரை |
| | மானியம்கம ரஜமகா விஹாரை |
| | அம்மடுவ குடா கதரகம தேவாலயம் |
| கேகாலை | ஸ்ரீ அபயரத்ன மலியதேவ ரஜமகா விஹாரை |

5.மேற்படி கருத்திட்டத்தில் எத்துல்நுவர வசிப்பாளர்களை மீளக் குடியமர்த்துவதற்காக மீள்குடியேற்ற செயற்றிட்டத்தை தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.2025 ஆண்டு வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள புனித பூமிகள்

| நகர அபிவிருத்திப் பிரதேசம், அரச நிறுவனங்கள், சமய வழிபாட்டுத்தலங்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொடுத்தல் | |
|---|---|
| இடத்தின் பெயர் | கருத்திட்டம் |
| ஒலபொட்டுவ ரஜமகா விஹாரை | தர்மப்போதனை மண்டபம் மற்றும் பொதுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் |
| அநுராதபுரம் ரன்மசு உயன | நில வடிவமைப்பு |
| அநுராதபுரம் லோவாமஹாபாய விஹாரை | பௌர்ணமி இல்லத்தை நிர்மாணித்தல் |
| சேருவில ரஜமகா விஹாரை | தானம் தயார் செய்யும் மண்டபம் |

6.2025 ஆம் ஆண்டில் அபிவிருத்தித் திட்டங்களை தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள புனித பூமிகள்

1. கொட்டசர பியங்கல ரஜமகா விஹாரை
2. கபலேவ எம்பவ ஸ்ரீ சுதர்மாராமய

7. புனித பூமிகளின் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு கட்டிடக்கலை திட்டமிடல், பொறியியல் திட்டங்கள் மற்றும் விலைமதிப்பீடுகளை தயார் செய்தல்.

8. இதற்கு மேலதிகமாக வேறு நிறுவனங்கள் மற்றும் சமய வழிபாடுதல் தளங்களின் கோரிக்கைகளுக்கு அமைய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் கட்டிடக்கலை திட்டங்கள், கட்டமைப்புசார் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளை தயார் செய்து கொடுக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

டபிள்யு.ரீ.எச். ருசிர விதான

பணிப்பாளர் நாயகம்,

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்.

## 03 அத்தியாயம் - 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2,024.00 | உண்மை நிலை 2,023.00 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 182,029,000 | 170,562,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 298,114 | 171,725 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 11,007,181 | 11,161,719 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 193,334,295 | 181,895,444 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ ஸ்ரீ (அ),(ஆ) | | 193,334,295 | 181,895,444 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | | | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ ஸ்ரீ (இ)-(ஈ) | | 193,334,295 | 181,895,444 | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | - | - | |
| 127,500,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 117,459,357 | 116,770,995 | ஏசீஏ-2(ஐ) |
| 71,450,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 63,018,134 | 56,111,268 | ஏசீஏ-2(ஐ) |
| 1,050,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 34,133 | 748,838 | ஏசீஏ-2(ஐ) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | 495,464 | - | ஏசீஏ-2(ஐ) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ஐ) |
| 200,000,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 181,007,088 | 173,631,101 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 5,000,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 5,689,204 | 3,243,763 | ஏசீஏ-2(ஐ) |
| 1,000,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 1,142,819 | 537,246 | ஏசீஏ-2(ஐ) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ஐ) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ஐ) |
| 1,000,000 | திறன் விருத்தி | 14 | 898,473 | 717,952 | ஏசீஏ-2(ஐ) |
| 37,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 585,125 | 2,327,920 | ஏசீஏ-2(ஐ) |
| 38,000,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 8,315,621 | 6,826,881 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 170,948 | 128,683 | ஏசீஏ-4 |
| 15,000,000 | முற்பணக் கொடுப்பனவுகள் | | 10,476,584 | 7,997,822 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 10,647,532 | 8,126,505 | |
| | மொத்த செலவினம் ஐ ஸ்ரீ (ஊ,எ,ஏ) | | 199,970,241 | 188,584,487 | |
| | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ ஸ்ரீ (உ-ஐ) | | (6,635,946) | (6,689,043) | |
| | பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | (6,635,946.00) | (6,689,043.00) | ஏசீஏ-7 |
| - | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | - | - | ஏசீஏ-3 |

1

## 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
## நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | உண்மை நிலை 2023 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 270,795,849 | 254,453,030 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5ஃ5ஏ | 22,427,982 | 22,958,580 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **293,223,831** | **277,411,610** |
| **தேறிய சொத்துக்கள் ஃ உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 22,218,573 | 22,876,337 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 270,795,849 | 254,453,030 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 209,409 | 82,243 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **293,223,831** | **277,411,610** |

பக்க இலக்கம் 01 முதல் 29 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம்சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின;/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 30 முதல் 47 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின விபரமும இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: ரஞ்சித் ஆரியரத்ன | பெயர்: W.T.H.R.விதான | பெயர் : G.P.Y.குமாரி |
| பதவி : செயலாளர் | பதவி :பணிப்பாளர் நாயகம் | |
| திகதி : 2025/02/28 | திகதி : | திகதி : 25/2/2025 |

W.T.H. Ruchira Withana
Director General
National Physical Planning Department
5th Floor, Stage 01, "Sethsiripaya"
Battaramulla

G.P.Y. Kumari
Director (Finance)
National Physical Planning Department
5th Floor, "C"
Sethsiripaya - Battaramulla

Ranjith Ariyaratne
Secretary
Ministry of Urban Development, Construction and Housing
12th floor, "Sethsiripaya" (Stage 11), Battaramulla.

2

ஏசீஇ- சீ

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2024<br>ரூபா | 2023<br>ரூபா |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 9,128,429 | 8,221,711 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 182,029,000 | 170,562,000 |
| முற்பணங்களை அறவிடல் | 11,172,739 | 11,540,520 |
| வைப்புக்களின் பெறுகை | 298,114 | 171,725 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | 202,628,282 | 190,495,956 |
| கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 180,863,304 | 172,725,263 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 34,133 | 748,838 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 2,767,692 | 1,356,349 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | - | - |
| முற்பணக் கொடுப்பனவு | 10,476,584 | 8,709,943 |
| வைப்புக் கொடுப்பனவு | 170,948 | 128,683 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | 194,312,661 | 183,669,076 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)ஸ்ரீ(அ)-(ஆ) | 8,315,621 | 6,826,880 |
| முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |
| கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு: | | |
| மூலதனம் செலவினம் | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 8,315,621 | 6,826,880 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | 8,315,621 | 6,826,880 |
| முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)ஸ்ரீ(ஈ)-(உ) | (8,315,621) | (6,826,880) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)ஸ்ரீ(இ),(ஊ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| *கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:* | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)ஸ்ரீ(ஏ)-(ஐ) | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஸ்ரீ(எ)_(ஒ) | - | - |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | - | - |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | - | - |

3

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **தயார்படுத்தலின் நோக்கம்**

2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2024 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2024 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடலின் அடிப்படை" என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

7

3.2 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 3.3 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமானம், மதிப்பீட்டின் விகிதமாக % |
| - | - | - | - | - | - |

3.4 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை

| ஏற்பாடுகளின் வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடு | | உண்மை செலவினம் | பயன்படுத்திக் கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்ட ஏற்பாடுகளின் விகிதமாக % |
|---|---|---|---|---|
| | நிதி ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| மீண்டெழும் | 200,000,000.00 | 198,093,900.00 | 181,007,088.00 | 91% |
| மூலதனம் | 37,000,000.00 | 38,906,100.00 | 8,315,621.00 | 21% |

3.5 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு - இல்லை

| தொடர் இல | அமைச்சு/ திணைக்களத் திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| | - | - | - | - | - | - |

3.6 **நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை**

| **ஆதனக் குறியீடு** | **குறியீட்டு விபரம்** | **2024.12.31 ஆம் திகதிக்கு பொருட் கணிப்பீட்டு அறிக்கைக்கு அமைய மீதி** | **2024.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்றுக்கு அமைய மீதி** | **எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்படுத்தப்பட உள்ளது** | **முன்னேற்றத்தைத % ஆக அறிக்கையிடல்** |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடமும், கட்டமைப்புக்களும் | - | 81,400,000.00 | - | |
| 9152 | இயந்திரசாதனம் | - | 106,855,449.23 | - | |
| 9153 | காணி | - | 82,150,000.00 | - | |
| 9154 | அருவைச் சொத்துக்கள் | - | 390,400.00 | - | |
| 9155 | உயிரியல்சார் சொத்துக்கள் | - | - | - | |
| 9160 | மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகள் | - | - | - | |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | - | - | -<br>- | |

## 3.7 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

எனது இல. எச்யுடி/ஈ/2024/என்பீடி/ஏவ்ஏ/01 திகதி : 2025 மே மாதம் ஆம் திகதி

பணிப்பாளர் நாயகம்,

தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்.

**தலைப்பு – 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை**

தலைப்பு – 311 தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடங்கும் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவுக்கு அமைய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு சமா்ப்பிக்கப்படுகின்ற இந்த நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 மே மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கு அமைய சமா்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியுள்ளதாக உள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 ஒரு விடயத்தை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதன் அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதன் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான குறிப்பு 1 தொடர்பாக கவனத்தைக் கோருகின்றேன். இந்த நிதிக் கூற்றுக்கள் நிதி ஒழுங்குவிதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ருவரி 21 ஆம் திகதிய திருத்திய 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல்கள் இலக்கம் 06/2024 இற்கமைய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் அவசியத்தன்மைக்காக தயார் செய்யப்பட்டுள்ளன. எனவே இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு

நோக்கங்களுக்கு உகந்ததாக இருக்காதிருக்க முடியும். எனது அறிக்கை தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் உபயோகத்தை மாத்திரம் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் விளக்கப்படுவதில்லை.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதம கணக்கீட்டு அலுவலரினதும், கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்புக்கள்**

அரச நிதி ஒழுங்குவிதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ருவரி 21 ஆம் திகதிய திருத்திய 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல்கள் இலக்கம் 06/2024 இற்கு இணங்க நிதிக் கூற்றுக்களை தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானம் செய்வது கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிவரப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உட்பிரிவுக்கு அமைய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பை தயார் செய்து பேணிவருவதை கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பில் காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு அதற்கமைய கட்டமைப்பை விளைதிறன்மிக்கவாறு பேணிவரத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

**1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு**

பொதுவாக, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதம உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கணக்கீட்டு அலுவலரை அறிவுறுத்தியுள்ளேன்.

**1.6 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துரை**

**1.6.1 மூலதன செலவினம்**

(அ) மூலதன செலவினத் தலைப்பு இலக்கம் 311-1-1-1-2506(ii) இன் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 20,000,000 ஆன தொகையில் 99 சதவீதமானவை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்படாது ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்தது. உரிய திட்டத்திற்கு அமைய தேவையான ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளாமை இந்த நிலைமைக்கு நேரடியாகக் காரணமாக அமைந்துள்ளது.

(ஆ) நிறுவனத்திற்கு உரித்தான 14 வாகனங்கள் காணப்பட்டதுடன், ஆண்டினுள் மேற்படி வாகனங்களை புதுப்பிப்பதற்காக ரூபா 5,820,973 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளதாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தற்போது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உபயோக மட்டத்திலான வாகனங்கள் இல்லை என்பதுடன் 2024 ஆம் ஆண்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செலவின அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களில் வாகனப் பராமரிப்புச் செலவினங்களில் ரூபா 1,252,217 மற்றும் எரிபொருள் செலவினங்களில் ரூபா 464,246 ஆன வித்தியாசம் காணப்பட்டது.

**1.6.2 முற்பணம் செலுத்தல்**

அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 262/2017 ஆம் இலக்க 2017 டிசம்பர் 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவுக்கு அமைய 2018 இன் பின்னர் ஓய்வு பெற்ற அல்லது உயிரிழந்துள்ள அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய எந்தவொரு கடன் தொகையும் முற்பண பீ கணக்கில் குறிப்பிடாதிருப்பதற்கு நிறுவனத் தலைவர்கள் பொறுப்புடன் செயற்படல் வேண்டுமாயினும், திணைக்களத்தில் உயிரிழந்துள்ள மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள் 02 பேரிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுதொகையான ரூபா 352,311 ஆன தொகை அறவிடப்படாது முற்பண பீ கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1.6.3 நிதி அல்லாத சொத்துக்கள்**

(அ) திணைக்களத்திற்கு உரித்தான உபயோகக் காணிகள் 17 மற்றும் கட்டிடங்கள் 18 காணப்படுகின்ற போதிலும் விலைமதிப்புச் செய்து பெறுமதி இனங்காணப்படாமை காரணமாக மீளாய்வு ஆண்டில் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருப்பது 8 காணிகளும், 11 கட்டிடங்களும் மாத்திரமாகும். இவற்றில் 11 காணிகளுக்கான உரித்து உறுதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுகர்வுப் பொருட்களாக இனங்காணப்பட வேண்டிய மிகக் குறைந்த பெறுமதியைக் கொண்ட பொருட்கள் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன.

(இ) 2023 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பீடு தொடர்பாக 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அகற்றப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள், 2024 ஆண்டில் நிதி அல்லாத சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மேற்படி சொத்துக்கள் 2024 டிசம்பர் 31 ஆ் திகதிக்கு நிதி அல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**1.6.4 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிவரப்படாமை**

அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் பற்றிய வழிகாட்டல் இலக்கம் 06/2024 இன் 08 ஆம் இலக்கப் பிரிவுக்கு அமைய திணைக்களத்தினால் நிலையான சொத்துப் பதிவேடு முறையாக மற்றும் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவுக்கு அமைய பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன என்பது.

(ஆ) கடந்த ஆண்டு தொடர்பிலான நிதிக் கூற்றுக்கள் பற்றி நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 வருமான முகாமைத்துவம்**

பொலன்னறுவை புலதிசிபுர ஓய்வு விடுதியில் தங்குமிட வசதிகளை வழங்கியமைக்காக 3-5 வருட காலமாக சனாதிபதி செயலகம், திணைக்களத்திற்கு ரூபா 340,200 ஆன தொகையை செலுத்த வேண்டியுள்ள பொதிலும் மேற்படி தொகை இதுவரை அறவிட்டுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.2 செலவின முகாமைத்துவம்**

திணைக்களம் மீளாய்வு ஆண்டில் 5 செலவுத் தலைப்புக்களுக்கு வேறு செலவுத் தலைப்புக்களிலிருந்து ரூபா 4,156,100 ஆன தொகை மாற்றல் செய்திருந்ததுடன் இது நிதி மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 17 முதல் 100 சதவீதம் வரையாகக் காணப்பட்டது. செலவினங்களை சரியாக இனங்கண்டு மதிப்பீடுகள் செய்யப்படாமை இந்நிலைமைக்குக் காரணமாக அமைந்தது.

**3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்**

2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்ற கடப்பாடுகள் ரூபா 562,490 ஆயினும், உண்மையாக இனங்காணப்பட்ட கடப்பாடுகள் ரூபா 785,427 ஆகக் காணப்பட்டது.

**3.4 பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் மேற்கொள்ள வேண்டிய சான்றுப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தலை மேற்கொள்ள வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை.

(அ) திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயார் செய்யப்பட்டு பேணிவரப்படுவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் சான்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், மேற்படி முறைமையின் விளைதிறன்மிக்க தன்மை பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்கவாறு பேணிவரத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும் என்றும், குறித்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டுமாயினும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான ஒரு கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறித்த காலப்பகுதிக்குள் சகல கணக்காய்வு வினாக்களுக்கும் பதில் அளிக்கப்படுவதை பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்தல் வேண்டுமாயினும் அறிக்கையின் 4.7 பந்திக்கு அமைய கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு 1 முதல் 3 மாதங்கள் வரையான காலம் எடுத்துள்ளது.

(இ) உள்ளகக் கணக்காய்வுப் பணியை முறையாக அமுல்படுத்துவதற்காக விளைதிறன்மிக்க முறையியலை ஏற்படுத்தப்பட்டுள்ளதை பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு** | **இணங்கியொழுகாமை** |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br><br>நிதிப் பிரமாணம் 1645 | பெணிவரப்பட வேண்டிய லொக் குறிப்புக் புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் MF/CG/02/(iv) ஆம் இலக்க 2017 யூன் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு அமைய சொத்துக்கள் மற்றும் செலவின முகாமைத்துவத்துக்கு அரசின் சகல நிதி அல்லாத சொத்துக்களையும் ஆவணமயப்படுத்துவதன் கீழ் கொம்ப்ட்ரோலா் நாகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய தகவல்கள் சமா்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நிதிப் பிரமாணம் 137 இற்கு இணங்காத வகையில் புனித பூமிகளை சுத்தம் செய்வதற்காக முதியங்கன அலுவலகத்தின் அலுவலா்களுக்கு வாரத்தில் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.30 வரையான நேரத்திற்கு மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், இக்கருத்திட்ட அலுவலகத்தில் சேவையாற்றுகின்ற அலுவலா்கள் ஒய்வுறுத்தப்பட்டதை அடுத்து பதவிகள் இல்லாதொழிக்கப்படும் வகையில் ஆட்சோ்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாறான நிலையில் வேலைகளை பகிர்ந்தளித்து வாராந்தம் 05 நாட்கள் மாத்திரம் வேலை செய்யக்கூடிய வகையில் நேர அட்டவணை தயாா் செய்து எஞ்சிய இரண்டு நாட்களுக்கும் மேலதிக நேரம் வழங்கியமை பற்றிய தெளிவான அங்கீகாரம் சமா்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், மீளாய்வு ஆண்டில் கருத்திட்ட அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுச் செலவினங்கள் திணைக்களத்தின் மொத்த செலவினத்தில் 79 சதவீதம் அதாவது ரூபா 5,640,333 ஆகக் காணப்பட்டது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**4.1.1 நோக்கு மற்றும் செயற்பணி**

திணைக்களத்தின் பிரதான செயற்பணி தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டத்தைத் தயாா் செய்வதாயினும், பல வருட காலம் கடந்துள்ள போதிலும், மேற்படி பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இந்தத் திணைக்களத்தினால் முக்கிய நோக்கத்துக்கு புறம்பாக புனித பூமிகளை பராமரிப்புச் செய்யும் நடவடிக்கைகள் மற்றும் புனித பூமிகளை பிரகடனம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. புனித பூமிகளை பராமரிப்புச் செய்யும் நடவடிக்கைகள் மற்றும் புனித பூமிகளை பிரகடனம் செய்யும் நடவடிக்கைகளுக்கு பாரியளவிலான செலவினம் மற்றும் ஊழியம் தாங்கிக கொள்ளப்படுவதுடன், மனித வளப் பற்றாக்குறை திணைக்களத்தில் நிலவும் சந்தா்ப்பத்தில் பிரதான நோக்கத்துக்கு புறம்பாக வேறு பணிகளுக்கு வளங்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.1.2 திட்டங்களை தயார் செய்தல்

2024 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டிருந்த போதிலும் இது 2023 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டதுடன், பெரும்பாலான விடயங்கள் திகதியை மாத்திரம் மாற்றம் செய்து குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மேற்படி பல்வேறு நோக்கங்கள் கூட மீளாய்வு ஆண்டில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.1.3 செயற்பணிகளை நிறைவேற்றாமை.

(அ) 1946 இன் 13 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் (269 ஆம் அத்தியாயம்) மற்றும் 2000 இன் 49 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் (திருத்த)ச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுக்கு அமைய தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகளைத் தயார் செய்தல் மற்றும் தேசிய பௌதீக திட்டத்தை தயார் செய்வது 2021 அக்டோபர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டுமாயினும், 2019 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்ட தேசிய பௌதீக திட்டத்திற்கு தேவையான திருத்தங்களை மேற்கொண்டு பிரகடனம் செய்வது 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதியளவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மேற்படி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அநுராதபுரம் புனித நகரத்தில் குடியிருப்புக்கள் வியாபிப்பதைக் கட்டுப்படுத்தல் மற்றும் சட்ட விரோத நிர்மாணிப்புக்களை நீக்குவதற்காக லொல்லுகஸ்வெவ நகரத் திட்டமிடல் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு வரை ரூ.மி. 1053 ஆன ஏற்பாடுகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூ.மி. 13.5 அதாவது 1 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டுள்ளதுடன், கருத்திட்ட அலுவலகம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய 08 வருடங்கள் கடந்துள்ள போதிலும் உத்தேச நோக்கங்களை அடைந்து கொள்ள முடியாது போயுள்ளதுடன், மீள் குடியேற்றத்துக்கான செயற்றிட்டத்தை தயார் செய்வதற்கு 04 அரச நிறுவனங்களிடமிருந்து ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்படாமை காரணமாக அப்பணியும் தோல்வியடைந்துள்ளது.

(இ) 2023 ஆம் ஆண்டினைப் போன்று 2024 ஆம் ஆண்டிலும் மத்திய, ஊவா, கிழக்கு ஆகிய 3 மாகாணங்களுக்கும் பிராந்திய பௌதீக திட்டங்களைத் தயார் செய்யத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையும் எந்தவொரு திட்டத்தின் வேலைகளும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மத்திய மாகாணத்தின் உணர்வுப்பூர்வமான சூழலுக்கு ஆலோசனைத் தொகுப்பொன்றை தயார் செய்யத் திட்டமிடப்பட்டிருந்த போதும் அதும் மேற்கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தின் பலவீனமான கண்காணிப்பு இதற்குக் காரணமாகியுள்ளதுடன், திட்டமொன்று இன்றி பொருத்தமற்ற நிர்மாணிப்புக்கள் மற்றும் பொது வசதிகள் முறையாக இல்லாமை மற்றும் சுற்றாடல்சார் சிக்கல்கள் ஏற்படுவதற்கு இது காரணமாக அமைந்துள்ளது.

(ஈ) புனித பூமியாக பிரகடனம் செய்வதற்காக புனித பூமியாக கருதப்படுகின்ற பிரதேசங்களுக்கு வெளிக்கள பரிசோதனை மேற்கொண்டு அவசியம் எனக் கருதப்படுகின்ற தகவுதிறன்களை பூர்த்தி செய்திருப்பின் வர்த்தமானப் பத்திரிகை மூலம் புனித பூமியாக பிரகடனம் செய்யப்படுகின்றது. மீளாய்வு ஆண்டில் 104 விஹாரைகளை புனித பூமிகளாக வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்வதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் திட்டங்களைத் தயார் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டினுள் அவற்றில் 91 விஹாரைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

(அ) மத்திய சுற்றாடல்சார் உணர்வுப்பூர்வமான பிரதேங்களுக்கான வழிகாட்டல்களைத் தயார் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக 15 உப பணிகள் திட்டமிடப்பட்டிருந்த போதும் ஆண்டினுள் மேற்படி உப பணிகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2023 ஆம் ஆண்டினைப் போன்று 2024 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2024 ஆண்டில் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த 06 புனித பூமிகள் 2025 ஆம் ஆண்டில் புனித பூமிகளாக பிரகடனம் செய்வதற்கான உத்தேச புனித பூமிகளாக தொடர்ந்தும் பெயரிடப்பட்டுள்ளன.

(இ) 2024 ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்ய உத்தேசிக்கப்பட்டவையாக குறிப்பிடப்பட்டிருந்த 03 புனித பூமிகள் அவ் ஆண்டில் பிரகடனம் செய்யப்படாத போதிலும், முன்கொண்டு செல்லப்பட்டிருக்கவும் இல்லை.

### 4.2 சொத்து முகாமைத்துவம்

(அ) கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் CGO/NFAMS/01/03 ஆம் இலக்க 2024 மே 21 ஆம் திகதிய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட கடித்திற்கு அமைய 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் 05 வாகனங்கள் அகற்றப்பட்டிருக்க வேண்டுமாயினும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அவ்வாகனங்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தினால் 15054 சது அடி அளவைக் கொண்ட அலுவலக இடவசதிகளுக்காக வருடாந்தம் ரூபா 39,328,876 ஆன வாடகை செலுத்தப்பட்டு வளவொன்று பராமரிப்புச் செய்யப்பட்டு வருவதுடன், திணைக்களத்தின் நிறைவேற்று மட்டத்திலான அலுவலர்கள் 30 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கக 2018 ஆம் ஆண்டு முதல் அலுவலக வளவு பிரிவிடல் செய்யப்பட்டு அதற்கான அலுவலக உபகரணங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்படி சொத்துக்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் இரண்டாம் நிலை மற்றும் நிறைவேற்று மட்டத்திலான அலுவலர்கள் 71 பேரைக் கொண்ட மொத்தப் பதவியணி 85 பேருக்குத் தேவையான அளவை விடவும் அலுவலக உபகரணங்கள், கணினி மற்றும் மொத்த வளவில் 1/3 ஆன இடவசதிகளும் குறைப்பயன்பாட்டு மட்டத்தில் பேணிவரப்பட்டுள்ளது.

(இ) மகியங்கனை சுற்றுலா விடுதி காணப்படுகின்ற வளவில் திணைக்களத்திற்கு உரித்தானது எனக் கருதப்படுகின்ற போதும் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டு கட்டிடமொன்று காணப்படுகின்றது.

(ஈ) திணைக்களம் பயன்படுத்துகின்ற இலக்கம் 65-0690 எனும் வாகனம் நிதி அமைச்சுக்கு உரித்தான வாகனமாகும் என்பதுடன், அவ்வாகனம் இத் திணைக்களத்திற்கு இதுவரை சாட்டுதல் செய்துகொள்ளப்படவில்லை.

### 4.3 அரச அலுவலர்களின் பிணை வைத்தல்

நி.பி. 880 இற்கமைய பிணை வைக்க வேண்டிய அலுவலர்களினால் அரச அலுவலர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய பிணை வைக்கப்படல் வேண்டுமாயினும், வைப்புப் பதிவேட்டுக்கு அமைய அலுவலர்கள் நான்கு பேர் பிணை வைத்திருக்கவில்லை.

4.4 **கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல்**

மீளாய்வு ஆண்டில் கணக்காய்வுக்கு இணங்க வெளியிடப்பட்ட கணக்காய்வு வினாக்களுக்கு திணைக்களம் உரிய காலப்பகுதிக்குள் பதிலளித்திருக்கவில்லை என்பதுடன், அவற்றுக்குப் பதிலளிப்பதற்கு 1 முதல் 3 மாதங்கள் வரை காலம் எடுத்துள்ளது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்**

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் 02/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய முடிவுப் பெறுபேறுசார் சுட்டிகளை இனங்காணல், பிரதான செயற்பணிச் சுட்டிகளை பிரகடனம் செய்தல், நிறுவனத்தின் செயற்பணியுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை இனங்காணல் ஆகிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**6. மனிதவள முகாமைத்துவம்**

திணைக்களம் தேசிய பௌதீக திட்டத்தை தயார் செய்தல் மற்றும் அதற்குத் தேவையான திருத்தங்களை காலத்திற்குக் காலம் மேற்கொள்வதுடன், இதற்கு நாட்டின் பல்வேறு துறைகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற கல்விமான்களை உள்ளடக்கிய குழு மற்றும் போதியளவிலான திட்டமிடல் கலைஞர்களை உள்ளடக்கிய பதவியணி இருத்தல் வேண்டும். எனினும் திணைக்களத்தில் மேற்படி பதவிகளுக்கு நிபுணத்துவ அறிவைக் கொண்ட அலுவலர்கள் போதியளவில் இல்லை என்பதுடன், தேசிய பௌதீக திட்டத்தை தாபிப்பதற்கு மற்றும் அமுல்படுத்துவதற்கு ஏனைய அரச நிறுவனங்களின் நிபுணத்துவ பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் 1946 இன் நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம் மற்றும் 2000 இன் 49 ஆம் இலக்க நாடு, நகரத் திட்டமிடல் சட்டம் மூலம் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், திணைக்களம் தாபிக்கப்பட்டு 11 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும் தேசிய பௌதீக திட்டங்களை அமுல்படுத்த முடியாது போயுள்ளது.

**6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உண்மையான பதவியணி**

(அ) 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 287 ஆகும் என்பதுடன் உண்மையாக உள்ள பதவியணி 145 பேர் ஆகும். இதற்கமைய 142 வெற்றிடங்கள் காணப்பட்டன. இது உரிய காலப்பகுதிக்குள் திணைக்களம் மேற்கொள்ள வேண்டியிருந்த பௌதீக திட்டங்களை தயார் செய்ய முடியாது போனமைக்கு நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ஆ) பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் நிருவாக மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரின் 18/2001 ஆம் இலக்க 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைய நாடளாவிய சேவைகளில் சேவையாற்றி வருகின்ற அலுவலர்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை இடமாற்றம் செய்யப்பட வேண்டுமாயினும் 05 வருடங்களுக்கும் மேலாக இடமாற்றம் பெறாத சில அலுவலர்களும் தொடர்ந்தும் திணைக்களத்தில் சேவையாற்றி வருகின்றார்கள.

**ஒப்பம் / எச்.எம். டி சொய்சா**

**சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக.**

## 04 அத்தியாயம் - செயலாற்றுகைக் சுட்டி

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

| விசேட சுட்டிகள் | உத்தேச பூர்த்தி செய்தலின் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்தது | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50%- 74% |
| 1. இற்றைப்படுத்தப்பட்ட தேசிய பௌதீக திட்டம் மற்றும் கொள்கை | √ | | |
| 2. தயார் செய்யப்பட்ட வலய திட்டம் | | | √ |
| 3. பிரதேச சபை எல்லைகளுக்குள் அமைந்துள்ள நகர்ப்புறப் பிரதேசங்களை இனங்கால் | √ | | |
| 4. வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்ட புனிதபூமிகள் | | | √ |
| 5. புனித பூமிகளுக்கு தயார் செய்யப்பட்ட உருவரை வரைபடங்கள் | | | √ |
| 6. புனித பூமிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் | √ | | |

## 05 அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை

### 5.1 இனங்காணப்பட்ட ஏற்புடையதான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக.

| இலக்கு/ நோக்கம் | வெற்றிச் சுட்டிகள் | இதுவரை வெற்றிபெற்றுக் கொள்வதன் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|
| | | 0% -49% | 50% - 74% | 75% - 100% |
| 2030 ஆம் ஆண்டளவில், சகல நாடுகளினதும் பங்கேட்பு, கூட்டு மற்றும் நிலைபேறான மனிதக் குடியிருப்புத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்துக்கு இடையீட்டு மற்றும் நிலைபேறான நகரமயமாக்கல் மற்றும் திறன்களை மேம்படுத்தல். | சனத்தொகை வளர்ச்சி விகிதத்திற்கு காணிப் பயன்பாட்டு விகிதம் | √ | | |
| தேசிய மற்றும் வலய அபிவிருத்தி திட்டமிடலை வலுவூட்டுவதன் மூலம் நகர, பகுதியளவிலான நகர மற்றும் கிராமிய பிரதேசங்களுக்கு இடையே பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் துறைகளின் தொடர்புகளுக்கு உதவுதல் | வலய மற்றும் பிரதேச அபிவிருத்திக்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |

### 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்களை விரிவாக விபரிக்குக.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் தயார் செய்யப்பட்டுள்ள நிலைபேறான குறிக்கோள்களில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு ஏற்புடையதாகின்ற குறிக்கோளாக உள்ள 11 ஆவது குறிக்கோளின் அம்சங்களை முழுமையாக பாதுகாப்பான, பலம்மிக்க மற்றும் நிலைபேறான நகரங்களை ஏற்படுத்தல். மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் சுட்டிகள் இனங்காணப்பட்டுள்ளன. மேற்படி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக

வலய மற்றும் பிரதேச திட்டங்களை தயார் செய்தல் வேண்டும். இந்த அறிக்கையின் 2 ஆம் அத்தியாயத்தில் 2024 ஆம் ஆண்டில் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தில் காணப்பட்ட சவால்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதான சவாலாகக் காணப்பட்டது திட்டமிடல் தொடர்பில் காணப்படுகின்ற பதவிகள் வெற்றிடமாக உள்ளமையாகும்.

## 06. அத்தியாயம் - மனிதவளத் தோற்றப்பாடு

### 06.1 பதவியணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடம் / (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 51 | 12 | 38 |
| மூன்றாம் நிலை | 08 | 02 | 05 |
| இரண்டாம் நிலை | 115 | 49 | 59 |
| ஆரம்ப | 113 | 82 | 24 |
| மொத்தம் | 287 | 145 | 126 |

### 06.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியிருப்பது எவ்வாறு என்பதைக் குறிப்பிடுக.

ஆரம்ப, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் சிரேஷ்ட எனும் சகல மட்டங்களையும் கவனத்தில் கொள்ளும் போது தற்போது இருப்பது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 50% இற்கும் குறைவான எண்ணிக்கையானோர் ஆவார்கள். 2024 ஆம் ஆண்டுக்கு தயார் செய்யப்பட்ட செயற்றிட்டத்திற்கு அமைய வலய பௌதீக திட்டங்கள் 02 இன் வேலைகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மனிதவளப் பற்றாக்குறை காரணமாக மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

### 06.3 மனிதவள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலஎல்லை | ஒட்டுமொத்த முதலீடு (ரூ.) உள்நாடு | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாடு /வெளிநாடு) | பூர்த்தி / பெற்றுக் கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|
| லீவு பொறுப்பான அலுவலரின் செயற்பணி மற்றும் பொறுப்பு | 01 | ஒரு நாள் | 5000.00 | உள்நாடு | அலுவலக நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளல் |
| சுயவிபரக் கோப்புக்களை பேணிவருதல் | 03 | இரண்டு நாள் | 39,000.00 | உள்நாடு | |
| உள்ளகக் கணக்காய்வு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை | 01 | இரண்டு நாள் | 13,000.00 | உள்நாடு | |
| வாகன முகாமைத்துவம் | 02 | ஒரு நாள் | 27,000.00 | உள்நாடு | |
| சம்பள திருத்தம் பற்றிய பயிற்சி செயலமர்வு | 04 | ஒரு நாள் | 12,000.00 | உள்நாடு | |
| Government payroll | 02 | மூன்று நாள் | 42,000.00 | உள்நாடு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| system | | | | | |
| Workshop on public procurement procedures | 01 | இரண்டு நாள் | 13,000.00 | உள்நாடு | |
| நிருவாக அலுவலா் திறன் அபிவிருத்தி | 01 | மூன்று நாள் | 15,000.00 | உள்நாடு | |
| கணக்காய்வு நடவடிக்கைகள் | சகல அலுவலா்களும் | ஒரு நாள் | 34,150.00 | உள்நாடு | |
| கணக்கீட்டு முறையியல் மற்றும் கணக்குகளை தயாா் செய்தல் | 01 | ஒரு நாள் | 13,000.00 | உள்நாடு | |
| அரச அலுவலா்களின் சம்பளங்களை தயாா் செய்தல் | 04 | ஒரு நாள் | 20,000.00 | உள்நாடு | |
| அரச அலுவலா்களின் முற்பண B கணக்குகளை தயாா் செய்தல் | 01 | ஒரு நாள் | 7000.00 | உள்நாடு | |
| அலுவலக சிற்றூழியா்களது செயற்பணி மற்றும் பொறுப்பு | 01 | இரண்டு நாள் | 13,000.00 | உள்நாடு | |
| பெறுகை செயன்முறை பற்றிய சான்றிதழ் பாடநெறி | 02 | ஒரு நாள் | 50,000.00 | உள்நாடு | |
| Government payroll system | 02 | மூன்று நாள் | 42,000.00 | உள்நாடு | |
| வருடாந்த பொருட் கணிப்பீடு மற்றும் சொத்துக்களை அகற்றல் | 01 | இரண்டு நாள் | 13,000.00 | உள்நாடு | |
| சுய விபரக் கோப்புக்களைப் பேணிவருவது பற்றிய இரு நாள் பயிற்சி செயலமா்வு | 01 | இரண்டு நாள் | 13,000.00 | உள்நாடு | |
| Training at Moratu uni | திட்டமிடல் கலைஞா் | ஒரு மாதம் | 480,000.00 | உள்நாடு | |
| மனப்பாங்கு அபிவிருத்தி மற்றும் சாதகமான மனப்பாங்கு | சகல அலுவலா்களும் | ஒரு நாள் | 55,000.00 | உள்நாடு | |

## 07 ஆம் அத்தியாயம் - இயைபு அறிக்கை

| இலக்கம் | ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு | இயைபு நிலைமை (ஏற்புடையதாகின்றது /ஏற்புடையதாவதில்லை) | ஏற்புடையதாவதில்லை எனின் அதற்கான சுருக்கமான விளக்கம் | ஏற்புடையதாகாமையை எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்காக பிரேரிக்கும் சரியான தீர்மானம் நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **1** | **கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | ஏற்புடையதாகின்றது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | ஏற்புடையதாகின்றது | | |
| 1.3 | தொழில் மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு) | - | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | - | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | வேறு | | | |
| **2** | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.2 | ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு / ஆட்களின் சம்பள அட்டைகளை பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்களுக்கான பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்குப் பொழிப்பு அறிக்கைகளையும் தயார் செய்து பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.9 | நட்டம் இழப்பு பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.10 | பொறுப்புகள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.11 | உபஆவணப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் (புயு-C20) | ஏற்புடையதாகின்றது | | |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகள் பகிரப்பட்டிருத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 3.2 | நிதி அதிகாரத்தை பொறுப்பளிப்பது பற்றி நிறுவனத்திற்குள் விழிப்புணர்வூட்டியிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் அலுவலர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஊடாக அங்கீகரிக்கப்படக் கூடியவாறு அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பள ஆவண மென்பொருள் பொதி (பெகேஜ்) யை பயன்படுத்தும் போது கணக்காளரின் நிருவாகத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| **4** | **வருடாந்த திட்டங்களைத் தயார் செய்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்றிட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயார் செய்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் உரிய திகதியில் சமர்ப்பித்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.5 | வருடாந்த காசோட்டக் கூற்றை உரிய திகதியில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **5** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) DMA/1-2019 இற்கமைய, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் விடையளித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 6.3 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உட்பிரிவுக்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 6.4 | நிதிப் பிரமாணம் 134(3) இற்கமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இற்கமைய, ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 உரிய ஆண்டில் நடாத்தியிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.2 | மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைப்புக்கு பொருத்தமான ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமனம் செய்து மேற்படி அலுவலர் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இற்கமைய பொருட் கணிப்பீட்டை நடாத்தி குறித்த அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | பொருட் கணிப்பீடு நிறைவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 3.31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| 8.4 | வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை மற்றும் வேறு சிபாரிசுகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.5 | சேதமடைந்த பொருட்களை அகற்றுவதை நி.பி. 772 இற்கமைய மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயார் செய்து உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.2 | வாகனங்கள் சேதமடைந்து 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றியிருத்தல் | ஏற்புடையதாக இல்லை | குழு நியமனம் செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | எதிர்காலத்தில் இந்நடடிக்கைகளை நிறைவு செய்ய முடியும். |
| 9.3 | வாகன லொக் புத்தகங்களைப் பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் நி.பி. | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 103,104,109, மற்றும் 110 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல் | | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றி மீள் பரிசீலனை செய்தல் | ஏற்புடையதாகின்றது | | உபயோக மட்டத்திலுள்ள வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 9.6 | லீசின் கொள்வனவுக் கால எல்லையின் பின்னர், லீசின் கொள்வனவு வாகனங்கள் லொக் புத்தகங்களில் முழு உரித்தையும் சாட்டுதல் செய்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **10** | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள செயற்படாத வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 10.3 | வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற மற்றும் சீராக்கல் செய்ய வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி நிலுவைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்த்திருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| **11** | **ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை தாண்டாதவாறு செலவிடல் | ஏற்புடையதாகின்றது | | |
| 11.2 | நி.பி. 94(1) இற்கமைய செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஏற்பாடுகளை வரையறைகளைத் தாண்டாதவாறு பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு ஏற்புடையதாதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 12.2 | நிலுவையாக உள்ள கடன் நிலுவைகள் பற்றிய காலப் பகுப்பாய்வை மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவையாக உள்ள கடன் நிலுவைகளைத் தீர்த்திருத்தல் | ஏற்புடையதாவதில்லை | | எதிர்காலத்தில் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பூர்த்தியடைந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 14.2 | நி.பி. 371 இற்கமைய வழங்கப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி, மேற்படி பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட்டிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 14.3 | நி.பி. 371 இற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டாதவாறு குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கின் மீதி, திறைசேரியின் பதிவேடுகளுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல். | ஏற்புடையதாகின்றது | | |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | குறித்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல்கள் செலுத்தப்பட்டிருத்தல் | - | | |
| 15.2 | சேகரிக்கப்பட்ட வருமானங்கள், வைப்புக் கணக்கில் செலவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு செலவு வைத்திருத்தல் | - | | |
| 15.3 | நி.பி. 176 இற்கமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிபதியிடம் சமா்ப்பிக்கப்பட்டிருத்தல் | | | |
| **16** | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 16.2 | பதவியணியின் சகல அங்கத்தவா்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 16.3 | 20.09.2017 ஆம் திகதிய ஆளுனு சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கமைய சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமா்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **17** | **பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலா் ஒருவரை நியமனம் செய்து தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல். | ஏற்புடையதாகின்றது | | |
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இணையத்தளம் அல்லது மாற்றுவழிமுறைகள் ஊடாக நிறுவனம் பற்றி பொது மக்களின் பாராட்டுக்கள் / பிரேரணைகளை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 17.3 | தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவை அல்லது ஒரு வருடத்தில் ஒரு தடவை அறிக்கைகள் சமா்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **18** | **பிரசைகள் பிரகடனத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2008(1) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் / சேவைபெறுநா் பிரகடனத்தை தயாா் செய்து அமுல்படுத்தியிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 18.2 | மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு அமைய, பிரசைகள் /சேவைபெறுநா் பிரகடனத்தை தயாா் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல், மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தினால் முறையியல் ஒன்று தயாா் செய்யப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **19** | **மனிதவள திட்டத்தை தயாா் செய்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 இன் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மனிதவளத் திட்டம் தயாா் செய்யப்பட்டுள்ளமை | ஏற்புடையதாகின்றது | | |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணி நேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை மேற்படி மனிதவளத் திட்டத்தில் உறுதி செய்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 19.3 | மேலுள்ள சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயாா் செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடா்பில் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலா் ஒருவா் நியமனம் செய்யப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **20** | **கணக்காய்வு பந்திகள் தொடா்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்** | | | |
| 20.1 | கடந்த ஆண்டுக்கு கணக்காய்வாளா் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கல் செய்யப்பட்டுள்ளமை. | ஏற்புடையதாகின்றது | | |